දුරකථන ) 0112669192, 0112675011
தொலைபேசி ) 0112698507, 0112694033
Telephone ) 0112675449, 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපැල ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
Website )

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය )
எனது இல ) NA/06/Annual/01/2024
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. )

දිනය )
திகதி ) 08 .11.2024
Date )

# සෞඛ්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார அமைச்சு
# Ministry of Health

**சுற்றறிக்கை இலக்கம் - 01 – 44 /2024**

இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் நாயகம்
பணிப்பாளர், தேசிய வைத்தியசாலை கண்டி/ காலி
மத்திய அரசின் கீழுள்ள அனைத்து போதனா வைத்தியசாலைகள், பொது வைத்தியசாலைகள்,
ஆதார வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள் உள்பட,
சுகாதார நிறுவனத் தலைவர்களுக்கும்

**தாதி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2024**

மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் பணியாற்றுகின்ற இடமாற்றங்கள் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற III, II, I மற்றும் அதி தரத்தைச் சேர்ந்த பதவியற்ற தாதி உத்தியோகத்தர்களிடமிருந்து 2024 வருடத்திற்குரிய இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. I ஆம் தர, அதி தர மற்றும் விஷேட தர (வைத்தியசாலை சேவை, கல்வி, பொது சுகாதாரம்) பதவி வகிக்கும் உத்தியோகத்கர்கள் இந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க முடியாது.

02. பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள் இந்த இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

I. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகளில் பணியாற்றுகின்ற 2024.12.31 ஆம் திகதியன்று தற்போதைய சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் 02 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள்

II. மஹரகம அபேக்ஷா வைத்தியசாலை, தேசிய உளநல சுகாதார நிறுவனம் (NIMH), தேசிய தொற்று நோய் நிறுவனம் (IDH) மற்றும் வெலிசரை மார்பு வைத்தியசாலை ஆகிய நிறுவனங்களில் பணியாற்றுகின்ற 2024.12.31 ஆம் திகதியன்று குறைந்தபட்சம் 02 வருட சேவை காலத்தைப்பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள்

III. மேலே I மற்றும் II இல் குறிப்பிடப்படாத மத்திய அரசின் கீழுள்ள ஏனைய அனைத்து வைத்தியசாலைகள்/நிறுவனங்களில் பணியாற்றும் 2024.12.31 ஆம் திகதிக்கு தற்போதைய சேவை நிலையத்தில் குறைந்தபட்சம் 04 வருட சேவை காலத்தைப்பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள்

IV. சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (நிர்வாகம்) V இன் ஊடாக இராணுவ வைத்தியசாலை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலை மற்றும் விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை ஜொன் கொதலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பொது வைத்தியசாலைகளில் சேவைக்கு இணைக்கப்பட்ட 2024.12.31 ஆம் திகதியன்று உரிய வைத்தியசாலைகளில் 02 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி

செய்துள்ள தாதி உத்தியோகத்தர்கள் கட்டாயமாக இடமாற்றத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பிக்காவிடின் சுகாதார செயலாளரினால் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு வைத்தியசாலைக்கு கட்டாயமாக நியமிக்கப்படுவார்கள்.

V. 2022 வருடாந்த இடமாற்றக்கட்டளை பெற்று பதிலாளர் வழங்கப்பட்டு இதுவரை இடமாற்றத்தில் செல்லாத ஆனாலும், அந்த இடமாற்றம் நடைமுறைக்கு வரும் திகதியை ஒத்திவைப்பதற்கு அனுமதி பெற்ற மற்றும் மகப்பேற்று விடுமுறை காரணமாக இடமாற்றம் செய்யாத உத்தியோகத்தர்களின் இடமாற்றக் கட்டளை, தொடர்ந்தும் அவ்வாறே செல்லுபடியாகும் என்பதுடன், அவர்கள் மீண்டும் இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. அவ்வாறு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். ஏனைய அனைத்து இடமாற்றக் கட்டளைகளும் இதன் மூலம் இரத்துச்செய்யப்படும்.

VI. 2022 ஆம் ஆண்டுக்கான இடமாற்றம் வழங்கப்படும் போது வடக்கு / கிழக்கில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெறுவதற்கு தம்மால் கோரப்படும் வைத்தியசாலை கிடைக்காது மத்திய அரசிற்குரிய வைத்தியசாலைகளுக்கு சேவை அவசியத்தின் பேரில் இடமாற்றம் பெறுவதற்கு விருப்பம் தெரிவித்த உத்தியோகத்தர் தங்களுடைய வடக்கு / கிழக்கு சேவைக் காலம் மற்றும் தற்போதைய சேவை நிலையத்தின் சேவைக் காலம் ஆகிய இரண்டையும் சேர்த்து இம்முறை இடமாற்றத்திற்காக விண்ணப்பிக்க முடியும்.

03. சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள http://www.health.gov.lk இன் ஊடாக ஆன்லைன் (online) மூலம் விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்பப்படல் வேண்டும்.

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்**

I. விண்ணப்பதாரிகள் கட்டாயமாக சுகாதார அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் குறிப்பிட்டுள்ள **http://previousmoh.health.gov.lk//NOIMS_2024/index.php** தொடர்பின் (link) ஊடாகவோ அல்லது கீழுள்ள QR Code ஊடாகவோ தாதி உத்தியோகத்தர்களுக்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள தகவல் அமைப்பில் பதிவு செய்தல் வேண்டும். அதற்காக விண்ணப்பதாரிகளின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தை பயன்படுத்த வேண்டும். அந்த பதிவின் போது உங்களுக்கு வழங்கப்படும் பயனர் பெயர் (User Name) மற்றும் கடவுச்சொல்லை (Pass Word) நீங்கள் பாதுகாப்பாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

II. ஒரு உத்தியோகத்தர் ஒரு விண்ணப்பத்தை மட்டுமே சமர்ப்பிப்பதை உறுதி செய்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் எவ்வித அறிவிப்புகளும் இன்றி நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

III. ஆன்லைன் (online) ஊடாக விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 2024.11.20 என்பதுடன், அதன் பின்னர் அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.

IV. யாதேனுமோர் உத்தியோகத்தருக்கு விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் மாற்றங்கள் செய்வதற்கு நேரிட்டால் 2024.10.22 ஆம் திகதிவரை அதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் இறுதியாக சரிசெய்யப்பட்ட விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை வைத்தியசாலையின் சுயவிபரக் கோவை விடயதானத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

V. ஆன்லைன் (online) விண்ணப்பத்தில் கோரப்பட்ட அனைத்து விபரங்களும் விண்ணப்பதாரியினால் பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் (submit) வேண்டும் என்பதுடன், அதன் பின்னர் விண்ணப்பதாரிக்கு கிடைக்கப்பெறும் PDF மென்பொருள் பிரதி (Softcopy) கணினி அச்சு இயந்திரத்தின் உதவியுடன் அச்சிட்டு, விண்ணப்பதாரியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்ட பின்னர், விண்ணப்பதாரி பணியாற்றும் வைத்தியசாலையின் பிரதான விஷேட தர தாதி உத்தியோகத்தரினால் சான்றுறுதி செய்யப்பட்ட பின்னர் விண்ணப்பதாரியின் சுயவிபரக்கோவை விடயதானத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

VI. உரிய விடயதான எழுதுனரால் விண்ணப்பதாரியினால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் அவர்களின் சுயவிபரக் கோவைக்கு அமைய சரியானவை என உறுதிப்படுத்தி வைத்தியசாலை செயலாளர் / நிருவாக உத்தியோகத்தரினால் நிறுவனத் தலைவரின் பரிந்துரைக்காக சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. நிறுவனத் தலைவரினால் பரிந்துரை செய்யப்பட்டு, பதவி முத்திரையிடப்பட்ட விண்ணப்பங்கள் இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 02 என குறிப்பிடப்பட்டுள்ள உப அட்டவணைக்கு அமைய பூர்த்தி செய்து இணைப்புக்கடிதத்துடன் பின்வரும் முகவரிக்கு நேரடியாக கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**பணிப்பாளர் (நிர்வாகம்) I**
**சுகாதார அமைச்சு,**
**சுவசிறிபாய,**
**கொழும்பு 10**

VIII. இது தொடர்பான தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் 011-2674967 எனும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.

04. **ஆன்லைன் (online) ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள காலம் 2024.11.22 ஆம் திகதியுடன் நிறைவடையும். நிறுவனத் தலைவரினால் பரிந்துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் தினமான 2024.11.29 ஆம் திகதிக்கு முன்னர் இந்த அமைச்சின் பணிப்பாளர் (நிர்வாகம்) I கிளைக்கு கிடைக்கப்பெறச் செய்வது நிறுவனத் தலைவரின் பொறுப்பாகும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.**

05. **விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்கள்**

I. ஆன்லைன் (online) ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தாலும், அதன் அச்சுப் பிரதியொன்றை கட்டாயமாக நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அதற்கு மாற்றமான சகல விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும்.

II. ஒவ்வொரு உத்தியோகத்தர்களும் சரியான மற்றும் முழுமையான தகவல்களைச் சமர்ப்பிப்பதை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு உத்தியோகத்தர் தொடர்பாக சரியான மற்றும் முழுமையான தகவல்களை வழங்குவது ஒவ்வொரு நிறுவனத் தலைவரினதும் பொறுப்பாகும்.

III. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நிறுவனத்தின் பிரசவ விடுமுறை, விஷேட விடுமுறை, தற்காலிக இடமாற்றம் போன்றவை வழங்கப்பட்ட தாதி உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். போலியான தகவல்கைளை வழங்குவதால் அல்லது தகைமையுடைய உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பிக்க சந்தர்ப்பம் கிடைக்காமையால் ஏற்படும் எந்தவொரு சிரமத்திற்கும் இந்த அமைச்சு பொறுப்பல்ல என்பதுடன், இது தொடர்பாக உரிய நிறுவனங்களின் தலைவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் தெரிவிக்கின்றேன்.

IV. இந்த சுற்றறிக்கைக்கு அமைவாக விண்ணப்பிக்கும் சகலருக்கும் இடமாற்றம் வழங்கப்படுவதாக இங்கு எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை என்பதை புரிந்து கொள்ளல் வேண்டும்.

V. இடமாற்றங்கள் கருத்திற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்கள் (அட்டவணை 1) காணப்படாத வைத்தியசாலைகளுக்கான கோரிக்கைகள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

VI. மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படும் வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களுக்கு நிரந்தர விடுவிப்பிற்காக விண்ணப்பித்து, தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்கு உரிய மாகாணத்தில் வெற்றிடங்கள் காணப்படின் உரிய மாகாணங்களின் இணக்கத்தை பெற்றுக் கொள்ளல் எனும் அடிப்படையில் இடமாற்றக்கட்டளை வழங்கப்படும். எனினும், உரிய மாகாணத்தின் உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் அவர்களை மாகாணங்களுக்கு விடுவிக்கும்படி நிறுவனத் தலைவர்களுக்கு அறிவிக்கும் வரை அவர்களை விடுவிப்பு செய்ய வேண்டாம் என்பதை அவதானத்திற்கு உட்படுத்துகின்றேன்.

06. வருடாந்த இடமாற்ற கால அட்டவணை

| இல | விடயம் | திகதி |
|---|---|---|
| 01. | வருடாந்த இடமாற்ற குழுக்களை நியமித்தல் | ஒக்டோபர் 01 |
| 02. | வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்கள் கோருவதற்காக இணையத்தில் வெளியிடல் | நவம்பர் 09 |
| 03. | ஆன்லைன் (online) முறையினூடாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் (submit) | நவம்பர் 22 |
| 04. | ஆன்லைன் (online) முறையினூடாக சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் அச்சுப்பிரதியை நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் சுகாதார அமைச்சிற்கு சமர்ப்பித்தல் | நவம்பர் 29 |
| 05. | வருடாந்த இடமாற்றக் கோரிக்கைகளை உள்ளடக்கி ஒரு பட்டியலை தயாரித்து நிறைவு செய்தல் | டிசம்பர் 16 |
| 06. | வருடாந்த இடமாற்றக்குழு ஒன்றுகூடி இடமாற்ற பரிந்துரைகளை பெறுதல் | டிசம்பர் 18 |
| 07. | வருடாந்த இடமாற்ற பரிந்துரைகளை அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடுதல் மற்றும் மேன்முறையீடுகள் கோரல் | டிசம்பர் 23 |
| 08. | ஆன்லைன் (online) முறையினூடாக மேன்முறையீட்டு விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் (submit) | டிசம்பர் 31 |
| 09. | ஆன்லைன் (online) முறையினூடாக பெற்றுக் கொள்ளப்பட்ட பிரதிகளை நிறுவனத் தலைவரின் பரிந்துரைகளுடன் சுகாதார அமைச்சுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மேன்முறையீட்டுக் கோரிக்கைகளை உள்ளடக்கி மீண்டும் இடமாற்ற பட்டியலை தயாரித்து நிறைவு செய்தல் | ஜனவரி 10 |
| 10. | மேன்முறையீட்டுக் கோரிக்கைகளை உள்ளடக்கி இடமாற்ற பட்டியலை தயாரித்து நிறைவு செய்தல். | ஜனவரி 20 |
| 11. | மேன்முறையீட்டுக்குழு ஒன்றுகூடி மேன்முறையீட்டுக்கான பரிந்துரைகளை பெறுதல். | ஜனவரி 24 |
| 12. | வருடாந்த இடமாற்றத்திற்கான பட்டியலை வெளியிடுதல். | ஜனவரி 31 |
| 13. | வருடாந்த இடமாற்றத்திற்கான இறுதி இடமாற்றக்கட்டளையை வழங்குதல். | 2019 தாதியர் குழுவிற்கு நியமனம் வழங்குவதற்கு நிகரான திகதியில் |

07. கிடைக்கப் பெறும் அனைத்து விண்ணப்பங்களையும் உள்ளடக்கி, விண்ணப்பதாரி தற்போதைய சேவை நிலையத்திற்கு சேவைக்கு சமூகமளித்த தினத்தின் பிரகாரம் சேவை மூப்பு பட்டியல் தயாரிப்பதுடன், ஒரே தினத்தில் சேவைக்கு சமூகமளித்த உத்தியோகத்தர்களின் மாணவ தாதியர் பயிற்சியின் இறுதிப்பரீட்சையில் நாடளாவிய ரீதியில் வெளிக்காட்டிய திறமையை கருத்திற்கொண்டு சேவை மூப்பு பட்டியல் தீர்மானிக்கப்படும். அப்பட்டியல் இடமாற்ற சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அந்த சபையின் பரிந்துரைக்கு அமைய 2024.12.31 ஆம் திகதி இலக்கம் 02 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப்பூர்த்தி செய்துள்ள தாதி உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றக்கட்டளை வழங்கப்படும். அக்கட்டளை www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட்டு மேன்முறையீடு கோரப்படுவதுடன், மேன்முறையீட்டு சபையின் பரிந்துரையினை கருத்திற்கொண்டு தயாரிக்கப்படும் இடமாற்ற கட்டளையுடனான இறுதிப் பட்டியல் மீண்டும் www.health.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். மேலும், இடமாற்றம் தொடர்பாக விசாரிப்பதற்காக இந்த அமைச்சிற்கு அடிக்கடி வருவது அவசியமற்றது என்பதை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்குமாறு அறியத்தருகின்றேன்.

08. 2024 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற செயல்முறைகள் நடைபெறும் போது தற்காலிக இடமாற்றம் மற்றும் மருத்துவ காரணங்களின் அடிப்படையிலான இடமாற்றங்கள் தவிர ஏனைய அனைத்து இடமாற்றங்களும் இடைநிறுத்தப்படும் என்பதை உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்குமாறு அறியத்தருகின்றேன்.

09. 2024 ஆம் ஆண்டிற்கான இடமாற்றக்கட்டளை பெறப்பட்ட தாதி உத்தியோகத்தர்களுக்கான பதிலாளர்கள் 2019 மாணவ தாதியர் குழாமின் ஊடாக வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், பதிலாளர்கள் தொடர்பான விபரங்களையும் உள்ளடக்கி இடமாற்றம் பெறும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக எழுத்துமூலம் நிறுவனத் தலைவர்களுக்கு அனுப்பப்படும்.

10. நோயாளர் பராமரிப்பு சேவைகளை தொடர்ந்து மேற்கொள்வது தாதியர் சேவையின் முதன்மை நோக்கம் என்பதால், இடமாற்றக் கட்டளை பெறப்பட்ட போதிலும் பதிலாளர்கள் இன்றி வைத்தியசாலை சேவைகள் பாதிக்கும் வண்ணம் விடுவிப்பு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

**11. இடமாற்ற சபையின் பரிந்துரை அல்லது வருடாந்த இடமாற்ற கட்டளை தொடர்பாக எவருக்கும் தனிப்பட்ட ரீதியில் அறிவிக்கப்பட மாட்டாது.**

12. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத இடமாற்றம் தொடர்பாக தாக்கம் செலுத்தக்கூடிய பிற விடயங்கள் தொடர்பாக அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் மற்றும் தாபன விதிக்கோவையின் படி இறுதித்தீர்மானம் எடுக்க எனக்கு அதிகாரம் உண்டு. இந்த சுற்றறிக்கையின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்படுமிடத்து, சிங்கள மொழியே அதிகாரத்தில் இருக்கும்.

Dr. P. G. Mahipala
Secretary
Ministry of Health
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10. Sri Lanka.

வைத்தியர் பீ.ஜீ. மஹிபால
செயலாளர்

01. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - தகவலுக்காக
02. தொழிற்சங்கங்கள் - தகவலுக்காக

## Cadre Details - III,II,I & Supra Nursing Officers

Annex -01

| NO | Institution | Approved Cadre | Available Staff | Vacancies |
|---|---|---|---|---|
| 1 | Teaching Hospital Jaffna | 732 | 641 | 91 |
| 2 | General Hospital - Ampara | 500 | 458 | 42 |
| 3 | Ashroff Memorial Hospital - Kalmunai | 211 | 210 | 1 |
| 4 | Base Hospital - Kalmunai (North) | 215 | 209 | 6 |
| 5 | Base Hospital Akkaraipattu | 154 | 148 | 6 |
| 6 | Teaching Hospital - Batticaloa | 675 | 611 | 64 |
| 7 | Base Hospital Pothuvil | 48 | 48 | 0 |
| 8 | Base Hospital Kanthale | 138 | 138 | 0 |
| 9 | District General Hospital Trincomalee | 300 | 250 | 50 |
| 10 | National Hospital -Galle | 1821 | 1735 | 86 |
| 11 | German - Srilanka Friendship Hospital For women Karapitiya - Galle | 310 | 297 | 13 |
| 12 | District General Hospital - Matara | 1354 | 1066 | 288 |
| 13 | District General Hospital - Hambanthota | 600 | 537 | 63 |
| 14 | Teaching Hospital - Anuradhapura | 1319 | 1132 | 187 |
| 15 | Teaching Hospital Polonnaruwa | 600 | 569 | 31 |
| 16 | National Nephrology Specialized Hospital - Polonnaruwa | 100 | 84 | 16 |
| 17 | Teaching Hospital - Kurunegala | 1459 | 1388 | 71 |
| 18 | Teaching Hospital - Kuliyapitiya | 317 | 310 | 7 |
| 19 | District General Hospital - Chilaw | 320 | 294 | 26 |
| 20 | National Institute of Infectious Diseases | 194 | 179 | 15 |
| 21 | Lady Ridgeway Hospital for Children (Teaching) | 900 | 870 | 30 |
| 22 | National Institute of Mental Health | 497 | 421 | 76 |
| 23 | Castle Street Hospital for Women (Teaching) | 389 | 332 | 57 |
| 24 | National Eye Hospital Sri Lanka | 234 | 199 | 35 |
| 25 | The National Hospital of Sri Lanka | 2928 | 2647 | 281 |
| 26 | Colombo East Base Hospital - Mulleriyawa | 200 | 164 | 36 |
| 27 | Medical Research Institute - Borella | 1 | 1 | 0 |
| 28 | Family Health Bureau | 6 | 6 | 0 |
| 29 | National Dental Hospital (Teaching) Sri Lanka | 108 | 81 | 27 |
| 30 | De Soysa Hospital For Women (Teaching) | 335 | 295 | 40 |
| 31 | National Blood Transfusion Service | 643 | 609 | 34 |
| 32 | National Cancer Control Programme | 5 | 2 | 3 |
| 33 | Colombo South Teaching Hospital - Kalubowila | 1100 | 917 | 183 |
| 34 | Divisional Hospital (Type-A) - Kandana | 52 | 47 | 5 |

| NO | Institution | Approved Cadre | Available Staff | Vacancies |
|---|---|---|---|---|
| 35 | Institute of Oral Health - Maharagama | 20 | 18 | 2 |
| 36 | Leprosy Hospital - Hendala | 8 | 7 | 1 |
| 37 | Anti Filariasis Campaign | 1 | 1 | 0 |
| 38 | Apeksha Hospital - Maharagama | 630 | 620 | 10 |
| 39 | National STD/AIDS Control Programme | 14 | 10 | 4 |
| 40 | National Programme for Tuberculosis Control & Chest Diseases | 22 | 20 | 2 |
| 41 | The National Institute for Nephrology Dialysis & Transplantation - Maligawattha | 110 | 108 | 2 |
| 42 | Colombo North Teaching Hospital - Ragama | 1045 | 965 | 80 |
| 43 | Rheumatolgy & Rehabilitation Hospital, Ragama | 98 | 92 | 6 |
| 44 | National Hospital for Respiratory Diseases - Welisara, Ragama | 220 | 203 | 17 |
| 45 | District General Hospital - Negombo | 375 | 320 | 55 |
| 46 | Teaching Hospital - Kalutara | 761 | 661 | 100 |
| 47 | Government Hospital - Aluthgama | 30 | 29 | 1 |
| 48 | Base Hospital - Beruwala | 35 | 29 | 6 |
| 49 | Goverment Hospital - Darga Town | 30 | 30 | 0 |
| 50 | Teaching Hospital - Rathnapura | 884 | 835 | 49 |
| 51 | District General Hospital - Embilipitiya | 325 | 315 | 10 |
| 52 | General Hospital (Teaching) - Kegalle | 590 | 568 | 22 |
| 53 | National Hospital - Kandy | 2100 | 1956 | 144 |
| 54 | Teaching Hospital - Peradeniya | 682 | 643 | 39 |
| 55 | Sirimavo Bandaranayake Specialized Children's Hospital (Teaching) - Peradeniya | 250 | 220 | 30 |
| 56 | Base Hospital (Teaching) - Gampola | 245 | 229 | 16 |
| 57 | District General Hospital - Nawalapitiya | 300 | 264 | 36 |
| 58 | District General Hospital - NuwaraEliya | 395 | 362 | 33 |
| 59 | District General Hospital - Matale | 300 | 298 | 2 |
| 60 | Teaching Hospital - Badulla | 900 | 793 | 107 |
| 61 | District General Hospital - Monaragala | 350 | 328 | 22 |

Chamika H. Gamage
Deputy Director General (Administration) I
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

இணைப்பு 02

## தாதி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் - 2024

நிறுவனத்தின் பெயர் - ..........................................................................................

| இல | இடமாற்றம் பெறுவதற்கு எதிர்பார்க்கின்ற உத்தியோகத்தரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தரம் | உங்கள் நிறுவனத்திற்கு சேவைக்கு சமூகமளித்த திகதி | ஆன்லைன் **(online)** விண்ணப்ப இலக்கம் **(Index No)** |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

வருடாந்த இடமாற்ற சுற்றறிக்கைக்கு அமைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இடமாற்ற விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள சகல உத்தியோகத்தர்களினதும் விண்ணப்பங்கள் இந்த உப அட்டவணையில் உள்வாங்கப்பட்டுள்ளது என உறுதி மொழிகின்றேன்.

தயாரித்தவர்

கையொப்பம் - .............................................
பெயர் - .............................................
திகதி - .............................................

பரிசீலித்தவர்

கையொப்பம் - .............................................
பெயர் - .............................................
திகதி - .............................................

நிறுவனத் தலைவரின் பரிந்துரை- : ..................................
(கையொப்பம் மற்றும் முத்திரை)

தேதி -:.....................................